[2009 ஜனவரி 23

## 4. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையில் தமிழினம் அழிவதைத் தடுப்பதற்கு இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெறுகின்ற இனவெறிப் போராட்டம் நிறுத்தப்பட வேண்டும் என்பது குறித்து, இந்த அவையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நண்பர் ரவிக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நண்பர் சிவபுண்ணியம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நண்பர் கோவிந்தசாமி, ம.தி.மு.க. சார்பில் நண்பர் இராமகிருஷ்ணன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நண்பர் ஜி.கே. மணி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நண்பர் பீட்டர் அல்போன்ஸ், அ.இ.அ.தி.மு.க. பிரதான எதிர்க்கட்சியின் சார்பில் நண்பர் செங்கோட்டையன் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-20*

இந்தத் தீர்மானம் அவசர, அவசியமாக இன்றைக்கு இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டுமென்று நான் விரும்பியதற்குக் காரணமே, கடந்த காலத்தில் பலமுறை சட்டப் பேரவையிலும், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும், ஒவ்வொரு கட்சியினுடைய பொதுக் கூட்டங்களிலும், நிருவாகக் குழுக் கூட்டங்களிலும் எடுத்துரைத்த மிக முக்கியமான தீர்மானமான, இலங்கையில் தமிழ் இனத்தை அழிக்கின்ற போர், நிறுத்தப்பட வேண்டும் என்பதைக் கடைசியாக ஒருமுறை இன்றைக்கு மத்திய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான். இதை ஏன் கடைசியாக ஒருமுறை என்று நான் குறிப்பிட்டேன் என்றால், பலமுறை இந்த அவையில் இதுபோன்ற தீர்மானங்கள், கட்சி மாச்சரியங்களுக்கு இடம் இல்லாமல், இந்தத் தீர்மானத்தைச் சாக்காக வைத்துக்கொண்டு, இதுதான் நேரம் என்று ஒருவரை ஒருவர் மறைமுகமாகவோ, ஜாடையாகவோ, நேரடியாகவோ தாக்குவதற்கான வாய்ப்பு இருந்தாலும், அதைப் பயன்படுத்திக்கொள்ளாமல், வாய்மையோடு வாதத்திலே ஈடுபட்டு, நம்முடைய கோரிக்கையை மத்திய அரசுக்கு எடுத்து வைத்திருக்கிறோம்.

இலங்கையில் நடைபெறுகின்ற போர், நிறுத்தப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய கோரிக்கையினுடைய முக்கியமான

2009 ஜனவரி 23] [கலைஞர் மு. கருணாநிதி]

குறிக்கோள். அதைவிட்டு, எள்முனை அளவும் பிறழாமல் பேசவேண்டும் என்று நான் காலையிலே நம்முடைய நண்பர்களையெல்லாம்கூட வேண்டிக்கொண்டேன். சற்று அங்கு இங்கு அந்தத் தடம் மாறினாலுங்கூட, தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும்; தமிழர்களை இலங்கைத் தீவிலே பாதுகாக்க வேண்டும்; அவர்களைக் காத்திட வேண்டும் என்ற அந்த உணர்வு, ஒரு மைய இழையாக ஓடிக் கொண்டிருந்த காரணத்தால், நான் எதிர்பார்த்தவாறு அல்லது வேறு சிலர் எதிர்பார்த்தவாறு எந்தவிதமான சங்கடங்களும் இல்லாமல், நாம் நம்முடைய கருத்தை இந்தத் தீர்மானத்தின்மூலமாக வலியுறுத்துகின்ற கட்டத்திற்கு வந்திருக்கின்றோம்.

*முற்பகல் 11-25*

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். *1939* ஆம் ஆண்டு ஆசியாவின் ஜோதி, பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், ஒரு செய்தியை வெளியிட்டு இருந்தார்கள். "Indian in South Asia" என்ற நூலில், அந்தச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே, இந்தியாவுக்கு வெளியே வாழுகிற இந்தியர்களைப்பற்றி, அப்போது நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்திற்கு நேரு அனுப்பிய செய்தி அது. அதிலே, It was in 1939 that Jawaharlal Nehru in a message to the Indian National Congress said that "India is weak today, and cannot do much for her children abroad. But she does not forget them and every insult to them, is humiliation and sorrow for her. A day will come when her long arm protection and her strength will compel justice for them."

இது, *1939* ஆம் ஆண்டு நேரு அவர்கள், தேசிய காங்கிரஸ் கூட்டத்திற்கு அனுப்பிய செய்தியிலே உள்ள அழுத்தந்திருத்தமான உறுதிமிக்க, வெளிநாட்டிலே வாழுகின்ற இந்தியர்களைப்பற்றி, தமிழர்கள் உட்பட்ட அனைவரையும்பற்றி அவர் கூறிய வாசகம். "இந்தியா இன்று பலவீனமாக உள்ளது. அது வெளிநாட்டில் வாழும் தனது மக்களுக்குப் பெரிதாக எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளது. ஆனால் இந்தியா, அவர்களையும், அவர்களுக்கு ஏற்படும் துயரத்தையும், இழிவையும் மறப்பதில்லை. ஒரு நாள் வரும்; அன்றைக்கு இந்தியாவின் பாதுகாப்புக் கரம் நீளும்; அதன் வலிமையினால் அவர்களுக்கு நீதி கிடைக்கும்" என்று நேரு அவர்கள், *1939* ஆம் ஆண்டு சொன்னதைத்தான் இப்போது நான் வலியுறுத்துகிறேன். நீதி கிடைப்பதற்கு ஜவகர்லால் நேரு அவர்கள்

எந்த இந்தியாவிலே முதல் பிரதமராகப் பொறுப்பேற்றாரோ, அந்த இந்தியத் திருநாடு இப்போது முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் நேருவின் அந்த வாசகத்தை நினைவுடுத்தி, நான் என்னுடைய தீர்மானத்தை முன்மொழிய விரும்புகிறேன்:

“பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் தமிழ் இனமே அழிந்து கொண்டிருக்கிறது. ஐ.நா. மன்றம் கண்டனம் தெரிவிக்கிற அளவுக்கு, அந்த நாடு அப்பாவித் தமிழ் மக்களின் இடுகாடாக, சுடுகாடாக ஆகிக்கொண்டிருக்கிறது. குழந்தை குட்டிகளோடு, குடும்பம் குடும்பமாக, குய்யோ முறையோ என்ற கூச்சலும், ஒப்பாரியும், புலம்பலும் பின்னணியாகப் பிணங்கள் குவிக்கப்படுகின்றன. அத்தனையும் தமிழ் மக்களின் பிணங்கள். அய்யோ! அந்தச் சிங்கள இராணுவ குண்டு வீச்சுக்கிடையே சிதறியோடும் சிறுவர் சிறுமியர் சிலராவது செத்துப் பிழைத்தார்கள் என்ற செய்தியும்கூட அறவே அற்றுப்போய் இன்று கூண்டோடு சாகின்றனரே! பூண்டோடு அழிகின்றனரே! மனித நேயமற்ற மாபாவிகளின் சேட்டையால் இத்தனை ஆண்டுகள் இழித்தும், பழித்தும், இறுதியாக அழித்தும் ஒழிக்கப்படுகிறதே உலகை ஆண்ட ஓர் இனம்; அந்த இனத்தை, இறுதியாக இலங்கையில் விடப்பட்டுள்ள இந்த அறைகூவலில் இருந்து எப்படி மீட்கப்போகிறோம்? இந்தியாவில் உள்ள தமிழ்நாடு என்ற மாநிலத்தில் நாம் வாழுகிறோம் என்பதால், நம்மை அரவணைத்துக் காத்திடும் பொறுப்பை இந்தியப் பேரரசு பார்த்துக்கொள்ளும்; ஆம்! பார்த்துக்கொள்ளவேண்டுமென்ற உரிமையோடு எதிர்பார்க்கிறோம். நமக்குப் பாதுகாப்புத் தருவதாயினும், பாதிப்பைக் களைவதாயினும், இரண்டையும் சீர்தூக்கிச் செயல்படுத்தி, இந்த மாநில மக்களுக்கும், இந்த மாநில மக்களாம் தமிழ்க் குடிமக்களின் நலத்திற்கும், நமது தொப்புள்கொடி உறவுகொண்ட இலங்கைத் தமிழ் மக்களின் நலத்திற்கும் உத்தரவாதம் அளிக்கக்கூடிய பொறுப்பு, உலகில் எங்கு இனப் படுகொலை நடந்தாலும் தட்டிக் கேட்கும் உணர்வும், உரிமையும் கொண்ட இந்தப் பெரிய ஜனநாயக நாடாம் இந்தியத் திருநாட்டில் மக்களாட்சியை நடத்துகிற மத்திய ஆட்சியின் கரங்களில் இருக்கும்போது, நாம் அந்தக் கரங்களைப் பிடித்துகொண்டுதானே, இலங்கையில் சீரழியும், செத்து மடியும் எங்கள் தமிழ்ச் சாதியைக் காப்பாற்றுக என்று கண்ணீர் மல்கக் கேட்கிறோம்? கேட்டுக் கேட்டுப் பயன்விளையாமற் போனதால் இறுதி வேண்டுகோளாக முறையிடுகிறோம், ‘உடனடியாக

இலங்கையில் போர் நிறுத்தம் செய்து, அந்த புத்தர் உலவிய பூமியில் அமைதிப் பூ மலர்ந்திட ஆவன செய்திடுக' என்று"

*முற்பகல் 11-30*

இந்த இறுதி வேண்டுகோள் புறக்கணிக்கப்படாமல்-இன்றே போர் நிறுத்தம் இலங்கையில்-அடுத்து அரசியல் தீர்வு-தொடர்ந்து அமைதி. எனவே, அந்த நல்ல விளைவை எதிர்பார்த்து இந்த மாமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த இறுதித் தீர்மானமாக இதனை நான் முன்மொழிகிறேன்.

இந்தத் தீர்மானத்திற்கும் பயன் ஏற்படாவிட்டால்--ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு, செயற் குழுக் கூட்டத்திலே விவாதித்து அடுத்து என்ன என்று முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பேசிய நண்பர்கள் சில பேர், ஆட்சி எதற்காக என்றார்கள். ஆட்சி என்று ஒன்று இருக்கிற காரணத்தால்தான், நாம் இந்த அளவிற்காவது கேட்க முடிகிறது. இங்கே ஒரு தீர்மானத்தையாவது போட முடிகிறது என்பதையும், சில பேர் நமக்குச் சொல்கின்ற காரணத்தால் அதையும் நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்; தேவையில்லை, நாளைக்கே ஆட்சியை இழந்துவிட்டால், இலங்கையிலே தமிழ் ஈழம் மலரும் என்ற உறுதி கிடைக்குமேயானால், அதற்கும் நாம் தயாராக இருப்போம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் எடுத்துக் கூறி, மீண்டும் ஒரு முறை சொல்கிறேன்: "அய்யகோ! இலங்கையில் தமிழ் இனமே அழிகிறது--இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்" என்பதை டெல்லியிலே உள்ளவர்களுடைய செவிகளிலே விழ, ஓங்கி ஒலித்து இந்தத் தீர்மானத்தை இந்த மாபெரும் அவையிலே முன்மொழிந்து இந்த அளவில் நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் கடந்த பல மாதங்களாக இலங்கையிலுள்ள அப்பாவித் தமிழர்கள்மீது இராணுவம் மேற்கொண்டிருக்கின்ற நடவடிக்கையின் காரணமாக, அங்கே ஒரு அமைதியற்ற சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. அங்கே வாழ்கின்ற இலங்கைத்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2009 ஜனவரி 23

தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமை அதாவது அங்கே வாழுகின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும், இலங்கைத் தமிழர்கள் உட்பட அனைவருக்கும் சம வாழ்வு, அதாவது அரசியல் ரீதியான தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் நாம் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் சார்பாக மத்திய அரசுக்குத் தீர்மானங்கள் வடிவமாக ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம். ஆனால், தொடர்ந்து அங்கே இராணுவம் அதனுடைய நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மீண்டும் இந்திய அரசுக்கு இறுதியான வேண்டுகோளாக ஒரு தீர்மானம் முன்மொழியப்பெற்று, அதற்கு நம்முடைய ஒட்டுமொத்த ஆதரவும் தேவை என்ற முறையில் ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள்.

எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கொறடா அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், “இங்கே பல்வேறு கட்சிகள் காங்கிரசுக்கு மட்டும்தான் இதில் பொறுப்பு இருக்கின்றது என்கின்ற தொனியில் எங்களை மட்டும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். மத்திய அரசில் நாங்கள் மட்டும்தான் அங்கம் வகிக்கின்றோமா? இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி இன்னும் பல கட்சிகள் எல்லாம் அங்கே பொறுப்பிலே இருக்கின்றனவே, உங்களுடைய தாக்குதல் எங்கள்மீது மட்டும் ஏன்? எங்களை மட்டும் ஏன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றீர்கள்? நீங்களும் அந்தக் குற்றவாளிக் கூண்டில் ஓர் அங்கம்தான்” என்ற தொனியில், (குறுக்கீடு) பொருள்படும்படி (குறுக்கீடு) பொருள்படும்படி...

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மிகவும் கெட்டிக்காரத்தனமாக வார்த்தைகளை, என் வாயில் வந்ததாகப் போடுகிறார்கள். I request him not to put his words in my mouth. ஆகவே நான் அப்படிச் சொல்லவில்லை. இங்கே மத்திய அரசைப்பற்றிப் பேச வருகின்றபோது நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்கள் சில கருத்துகளைத் தெரிவித்த காரணத்தினால், அவர்களுக்கும் இதில் பொறுப்பு உண்டு என்று நான்

2009 ஜனவரி 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நினைவூட்டினேனேயொழிய, குற்றவாளிக்கூண்டில் நாங்கள் யாருமே நிற்கவில்லை. நாங்கள் சாதனை புரிந்தவர்களாகத்தான் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இவ்வளவு காலம் இவ்வளவு நேரமும் விவாதிக்கப்பட்டது கவன ஈர்ப்புத் தீர்மானம். கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துகளை முழு அளவில் எடுத்துச் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் அதற்கு விடையும் சொல்லி, விடைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுபோல தீர்மானமாக ஒரு கருத்தையும் தெரிவித்துவிட்டார்கள். மறுபடியும் அதிலே விவாதம் செய்வது என்பது கவன ஈர்ப்புத் தீர்மான முறையைச் சேர்ந்தது அல்ல. எனவே, அந்தவகையில் மேலும் தொடர்ந்து விவாதித்துக்கொண்டிருப்பதைத் தாங்கள் அனுமதிப்பது நியாயமல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானம் முன்மொழிந்தாகிவிட்டது. கிளாரிபிகேஷன் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவாதம் நடத்தக்கூடாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டன. அதைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக நீங்கள் எடுத்துக் கொண்டு, அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசலாம் என்று சொன்னீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய பதிலோடு ஓர் அரசினர் தீர்மானத்தையும் இணைத்ததனால், நான் சில விஷயங்களை இங்கே சொல்லவேண்டிய

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2009 ஜனவரி 23

கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையில்தான் சில கருத்துகளை இங்கே சொல்லலாம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றேன். ஆக, இதற்கு முன்னால் நாம் பலமுறை வேண்டுகோள் விடுத்தோம். மத்தியில் இருக்கின்ற மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்ற விவரத்தினை மத்திய அரசும் இதுவரை சொல்லவில்லை; இங்கே ஆளுகின்ற மாநில அரசும் மத்திய அரசில் ஓர் அங்கம்தான்; அவர்களும் இதுவரை சொல்லவில்லை. நாம் வேண்டுகோள் விடுத்தோம். போராட்டங்கள் நடத்தினோம். மனிதச் சங்கிலி நடத்தினோம். பிரதமரைச் சென்று சந்தித்தோம். பிரணாப் முகர்ஜியை நீங்கள் சந்தித்தீர்கள். (குறுக்கீடுகள்) மனிதச் சங்கிலியை நீங்கள் நடத்தினீர்கள். (குறுக்கீடு) இவ்வளவையும், யாரை வலியுறுத்தி நீங்கள் நடத்தினீர்கள்? உங்களை நீங்களே வலியுறுத்திக்கொள்கிறீர்களா? மத்திய அரசில் யார், யாரெல்லாம் பொறுப்பில் இருக்கின்றீர்கள்? அங்கே பொறுப்பை ஒருவரிடம் தட்டிக் கழித்துவிட்டு, மத்திய அரசு பார்த்துக்கொள்ளும்; இந்தியப் பேரரசு பார்த்துக்கொள்ளும் என்று சொன்னால், அந்த மத்திய அரசில் ஓர் அங்கமாக நீங்கள் ஏன் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கின்றீர்கள்? இங்கே ஒவ்வொரு முறையும் வேண்டுகோள் விடுக்கின்றோம். தொடர்ந்து அங்கே இலங்கைத் தமிழர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். செய்தித்தாள்களில் வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோது உள்ளம் எல்லாம் பதைபதைக்கின்றது. மருத்துவமனையில் குண்டு வீசப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் குண்டு வீசப்படுகிறது. பதுங்குக் குழிகளில் குழந்தைகள் அச்ச உணர்வோடு தங்கள் இதயங்களைப் பிடித்துக்கொண்டு அங்கே பதைபதைப்புடன் இருப்பதைப் பார்த்து, நாம் இங்கே கண்ணீர் சிந்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதன்மூலமாகக் கடந்த மாதங்களில் தொடர்ந்து ஏற்பட்டிருக்கிற இலங்கைப் போரில் மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? மத்திய அரசு நடவடிக்கை எடுத்ததற்கு உங்களுடைய பங்களிப்பு என்னவாக அங்கு இருந்தது என்ற விடையை நீங்கள் சொல்லிவிட்டு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுங்கள். ஆகவே, நீங்கள் நடத்துகின்ற நாடகத்திற்கு நாங்கள் நடிக்கத் தயாராக இல்லை என்று சொல்லி, வெளிநடப்புச் செய்கின்றோம்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

2009 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை நிறைவேற்றக் கோருதல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணர்ச்சிமிக்க தமிழர்களுடைய உள்ளங்களையெல்லாம் ஈர்த்துள்ள ஒன்றுபட்ட ஒரு தீர்மானத்திற்கு எப்படியும் களங்கம் விளைவித்தே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு, அதிலே வெற்றி பெற்று, வெளிநடப்புச் செய்துள்ள அ.தி.மு.க. தோழர்களுடைய சாமர்த்தியத்தைப் பாராட்டத்தான் வேண்டும்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

## 5. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 10-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

மாண்புமிகு உறுப்பினர்கள்

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி